21st October 1964]

சர்க்கார் ஒரு குழு அமைத்துள்ளனர். இக் குழுவின் அறிக்கை வந்தவுடன் மேற்படி திட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

Electrification of villages.

* 45 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of villages electrified as on 31st December 1963 in the State; and

(*b*) whether it is proposed to complete rural electrification to cover all the villages in the State, before the end of the Third Plan Period?

A.—(*a*) 16,486 towns, villages and hamlets in the States heva been electrified up to 31st December 1963.

(*b*) All villages with a population of 5,00 and above and most of the villages with a population of 2,000 and above would be covered by the end of the Third Plan period.

டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையில் வெடி விபத்து

46. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையின் ஜிப்ஸம் சுரங்கத்தில் 1964 மார்ச் மாதம் வெடி விபத்து ஏதேனும் ஏற்பட்டதா?

(இ) ஆமெனில் அதன் காரணமாக எத்தனை பேர் உயிர் இழந்தனர்?

பதில்: (அ) & (இ) ஆம். 2—3—64 பிற்பகல் 12-30 மணிக்கு கள்ளக்குடி கிராமம், டால்மியாபுரத்தில், டால்மியா சிமெண்ட் லிமிட்டெட்டில், சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் இடத்திற் கருகில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. இந்த விபத்தில் மூவர் உயிர் இழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை சாகுபடியை அதிகரித்தல்

* 47 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1964-65க்கு நிலக்கடலை சாகு படியை அதிகரிக்கும் திட்டத்தை அமலாக்க எந்தெந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

(இ) மேற்படி இடங்களில் அதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

பதில்.—(அ) அரியலூர்.

(இ) இத் திட்டத்தின்கீழ் அடியிற்கண்ட சலுகைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(i) பூச்சிகளிலிருந்தும் நோய்களினின்றும் எண்ணெய் வித்துப் பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்து பாதி விலையில் விற்கப்படுகின்றது.

(ii) விவசாயிகளுக்கு நிலக் கடலை வித்துக்கள் உள்ளூர் சந்தை விலையில் விற்கப்படுகின்றன.

நவீன சாகுபடி முறைகளை மேற்கொள்வதுபற்றி சிறப்புப் பணியாளர் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். அரியலூரில் உள்ள மூலவிதைப் பண்ணையில் விதைகள் ஏராளமான அளவில் தயாரிக்கப்படுகின்றன. இந்த விதைகள், விவசாயிகளின் நிலங்களில் முதல், இரண்டாம் நிலைகளில் அதிகரிக்கப் படுவதற்காக மீண்டும் வழங்கப்படுகின்றன.

தீவிர விவசாய மாவட்டத் திட்டம்

* 48 கேள்வி.—திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீவிர விவசாய மாவட்டத் திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

பதில்.—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து பஸ் ஸ்டாண்டு

* 49. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் Panchayat bus stand -க்கு கால்கோள் விழா நடந்து பல ஆண்டுகள் கடந்தும் அந்த நிலையம் இதுவரையில் உருவாகாமைக்கு வருத்தம் தெரிவித்து அவ்வூராட்சிப் பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்ததா?

(இ) அப்படியானல் அதன்மீது அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?

பதில்.—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.